DEPOSITION OF WITNESS

(CHAPTER XXII CODE OF CRIMINAL PROCEDURE)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE , SENDAMANGALAM

C.C.No.16/2026

PW - 7

| | | |
|---|---|---|
| Name | : | திருநாவுக்கரசு (Lw - 17) |
| Father / Husband Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act of 1969(Central Act 44 of 1969 on the ------------day of ----------26

**(**எதிரி ஆஜர்**)**

முதல் விசாரணை **Date : 22.05.2026**

நான் தற்போது நாமக்கல் மாவட்டம், சேந்தமங்கலம் காவல்நிலையத்தில் சிறப்பு காவல் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். இவ்வழக்கில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த காவல் உதவி ஆய்வாளர் திரு.தமிழ்குமரன் மற்றும் காவல் ஆய்வாளர் திரு.கோவிந்தராசன் ஆகியோரின் கையொப்பம் எனக்கு நன்கு தெரியும். ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன்.

கடந்த 03.09.2025ம் தேதி காலை 07.00 மணிக்கு காவல் உதவி ஆய்வாளர் திரு.தமிழ்குமரன் சேந்தமங்கலம் காவல் நிலையத்தில் பொறுப்பு அலுவலில் இருந்தபோது வாதி ருக்மணி என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த எழுத்துமூலமான புகாரினை பெற்று நிலைய குற்ற எண்.204/2025, BNS 281, 106 பிரிவுகளின் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தார். **(**முதல் தகவல் அறிக்கை அ**.**சா**.**ஆ**.3** ஆக குறியீடு செய்யப்படுகிறது**.)** முதல் தகவல் அறிக்கையின் அசல் மற்றும் வாதியின் புகார் மனுவை இணைத்து கனம் நீதித்துறை நடுவர் அவர்களுக்கு அனுப்பியும் பிற நகல்களை உரிய அதிகாரிகளுக்கு அனுப்பியும், ஒரு நகலை புலன் விசாரணைக்காக ஆய்வாளர் திரு.கோவிந்தராசன் அவர்களின் பார்வைக்கு வைத்தார்.

வழக்கை தன்னுடைய புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்ட ஆய்வாளர் 03.09.2025ம் தேதி காலை 07.00 மணிக்கு சம்பவ இடமான அக்கியம்பட்டி டு வடுகப்பட்டி ரோட்டில் கண்ணம்மா என்பவரின் வீட்டின் அருகே சென்று சாட்சிகள் செல்வகுமார், உமாதேவி ஆகியோா் முன்னிலையில் சம்பவ இடத்தை பாா்வையிட்டு மாதிரி வரைபடம், பாா்வை மகஜா் தயாா் செய்து அதில் சாட்சிகளிடம் கையொப்பம் பெற்றார். (மாதிரி வரைபடம் அ.சா.ஆ.**4** ஆக குறியீடு செய்யப்படுகிறது.)

பின்னா் நாமக்கல் அரசு மருத்துவமனை சென்று விபத்தில் இறந்து போன மணி பிரேதத்தின் மீது சவகிடங்கு முன்பு வைத்து சாட்சிகள் மற்றும் பஞ்சாயத்தார்கள் முன்னிலையில் காலை 09.30 மணி முதல் 11.30 மணி வரை பிரேத விசாரணை மேற்கொண்டார். **(பிரேத விசாரணை அறிக்கை அ.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** இறப்பின் காரணம் அறியும் பொருட்டு மணி பிரேதத்தின் மீது பிரேத பரிசோதனை செய்து ஆய்வறிக்கை வழங்கும்படி பணி மருத்துவருக்கு வேண்டுகோள் கடிதம் கொடுத்து பிரேதத்தை பெண் தலைமை காவலர் திருமதி.கொழுந்தரசி மூலம் பிரேதத்தை ஒப்படைத்தார். பின்னா் சாட்சிகள் ருக்மணி, செல்வி, ராம்குமார், முருகேசன், கீதா, செல்வகுமார், உமாதேவி, சசிக்குமார், சூர்யா, சுமதி ஆகியோர்களை விசாாித்து வாக்குமூலம் பதிவு செய்தார். 15.09.2025ம் தேதி விபத்தின் காரணம் அறியும் பொருட்டு விபத்தில் சம்மந்தப்பட்ட வாகனமான TN 28 BF 8841 பதிவெண் கொண்ட வாகனத்தை மோ.வா.ஆய்வாளா்க்கு வேண்டுகோள் கடிதத்துடன் அனுப்பி வைத்தார்.

20.12.2025ந் தேதி காலை 09.00 மணிக்கு நிலையத்தில் ஆஜரான எதிரி ருக்மணியை காரணம் கூறி கைது செய்து தக்க பிணையில் விடுவித்தார். அன்றைய தினமே மோ.வா.ஆய்வாளாா் திரு.செந்தில் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து மோ.வா.ஆ.அறிக்கை பெற்றார். (மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கை அ.சா.ஆ.**6** ஆக குறியீடு செய்யப்படுகிறது.) பின்னர் அன்றைய தினமே மணிக்கு சிகிச்சை வழங்கிய மருத்துவர் திரு.குமரவேல் மற்றும் பிரேத பரிசோதனை மேற்கொண்ட மருத்துவா் திரு.ரகுதீபன் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து பிரேத பரிசோதனை அறிக்கை பெற்றார். (பிரேத பரிசோதனை அறிக்கை அ.சா.ஆ.**7** ஆக குறியீடு செய்யப்படுகிறது.) அன்றைய தினமே பெண் தலைமை

காவலர் திருமதி.கொழுந்தரசி மற்றும் காவல் உதவி ஆய்வாளர் திரு.தமிழ்குமரன் ஆகியோரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார். இத்துடன் தனது புலன் விசாரணையை முடித்து எதிரி மீது BNS 281, 106 பிரிவின் கீழ் இறுதி அறிக்கை தாக்கல் செய்தார்.

எதிரி தரப்பு குறுக்கு விசாரணை

நான் சொல்லும் நாள் நேரத்தில் முதல் தகவல் அறிக்கை எதுவும் பதிவு செய்யவில்லை என்றும், வழக்கின் ஆவணங்கள் அனைத்தும் காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டது என்றும், சாட்சிகள் யாரையும் விசாரணை செய்யவில்லை என்றும், எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் சம்மந்தமில்லை என்றும், மோட்டார் வாகன இழப்பீடு பெறவேண்டி தாக்கல் செய்யப்பட்ட பொய்யான புகாரின் பேரில் பதிவு செய்யப்பட்ட வழக்கிற்காக ஆதரவாக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

மறுவிசாரணை: இல்லை.

**Taken down before me in open court and read/interpreted to the witness and acknowledged by him/ her to be correct.**

**Sd/- Tr.S.Raja Kumaran B.E. L.L.B.,**
**Judicial Magistrate,**
**Sendamangalam**